அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

72 T I

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020

First Term Test - Grade 13- 2020

சுட்டெண் : ......................

# தமிழ் I
# Tamil I

காலம் : 3 மணி

- **பகுதி I ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II ல் ஏதேனும் மூன்று வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

(01) கீழ்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக ?

அ. ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பன்னாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூணணிந்த யானை யியற்றேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே

1. இப்பாடலின் திணை, துறை என்பவற்றை தருக?
2. இப்பாடலில் கூறப்படும் அதியமானின் கொடைச் சிறப்புகளை விளக்குக?
3. இப்பாடலில் வெளிப்படும் புறத்திணை இலக்கியப் பண்புகள் எவை? (12 புள்ளிகள்)

ஆ. ‘ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
“தோழமை” என்று, அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
“ஏழமை வேடன் இறந்திலன்” என்று எனை ஏசாரோ? ‘

1. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக?
2. குகன் இராமன் மீது கொண்ட அன்பினை விளக்குக?
3. இப்பாடலில் சந்தம் பேணப்பட்டவாற்றை விளக்குக? (12 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(02) ‘‘அ’’ பகுதியிலுள்ள கவிதயைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக ?

அல்லது

‘‘ஆ’’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக ?

1) மானிடத் தன்மையைக் கொண்டு – பலர்
வையத்தை ஆள்வது நாம்கண்டதுண்டு
மானிடத் தன்மையை நம்பி – அதன்
வன்மையினாற்புவி வாழ்வுகொள் தம்பி !

‘‘மானிடம்’’ என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்

2) மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த
வையத்திலே அவன் செய்த வரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறுவாய் !

மானிட மென்பது புல்லோ? – அன்றி
மரக்கட்டையைக் குறித்திடவந்த சொல்லோ?
கானிடை வாழ்ந்ததும் உண்டு – பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான் !

3) மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்.

மானிடம் என்பது குன்று – தனில்
வாய்ந்த சமத்தவ உச்சியில் நின்று
மானிடர்க் கினிதாக - இங்கு
வாய்ந்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கனும் நீபார் ! – வாழ்வின்
வல்லமை ‘‘மானிடத் தன்மை’’ என்றே தேர்

1. கவிஞர் மானிட ஆற்றலை வலியுறுத்துமாற்றை விளக்குக?
2. கவிஞர் மானிட ஆற்றலை உணர்ந்து செயற்பட வலியுறுத்துமாற்றை விளக்குக?
3. கவிதையில் வெளிப்படும் மானிட ஆற்றலை உணராமையின் இழிவினை விளக்குக?
4. கவிதையில் கையாளப்பட்டுள்ள உருவக அணிகளை விளக்குக? (16 புள்ளிகள்)


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.
NWP - EXAM

**அல்லது**

இப்பூமண்டலத்தில் இப்பொழுது வழங்குகின்ற மொழிகள் தோற்று முன்தோன்றிய தமிழ்மொழியானது இன்றும் நிலைபெற்று நின்று இரண்டு கோடி மக்களுடைய வழக்கு மொழியாக விளங்குகின்றது. தமிழர் உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றார்கள். வணிகத்திலும், தொழிற்றுறைகளிலும் ஈடுபட்டவர்களாய்த் தென்னாபிரிக்கா, மத்திய அமெரிக்கா, மலாயா, சிங்கப்பூர் முதலிய பிரதேசங்களிலும் பலவகை இயற்கை வனப்பு வாய்ந்த நமது தாய்நாடாகிய இலங்கைத் தீவிலும் திருவேங்கடந் தென்குமரி எல்லையாகவுடைய பழந்தமிழ் நாட்டிலும் தமிழர் வசித்து வருகின்றனர். இரண்டு கோடி மக்களால் வழங்கப்பட்டு வருகின்ற இம்மொழி உயிருடைய மொழி என்பதை மறுக்க வல்லார் யாவர்? தமிழ் அழிந்து போகவில்லை. உயிருடனிருக்கின்றது. அரசியல் மாற்றங்களினாலும் பிறமொழியாட்சியினாலும் தன்னியல்பினிற் குன்றிச் சோர்வினால் அயர்சியடைந்த தமிழ்மாது மீண்டும் விளித்தெழுந்து விட்டாள். அன்னையாகிய தமிழ்மாது விழித்தெழுந்த சிறப்பினைக் கண்ட பாவலரும், நாவலரும் இவளுக்குத் திருப்பள்ளியெழுச்சி கூறுகின்றனர். காரிருட் காலங் கழிந்துவிட்டது. புதிய ஊக்கத்தோடு எழுந்த நம் அன்னையினுடைய அடியினை மலருக்கு வணக்கஞ் செலுத்துவோமாக.

வாழ்கையினது மர்மத்தையறிந்து கொள்வதற்கு உபயோகமான கல்வியே கல்வியெனப்படுவது. வாழக்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல் உத்தம கவிகளுக்கு இருப்பது போலப் பிறருக்கில்லை. புறநானூறென்னும் சங்கத்தொகை நூலிலும், சீவகன் சரிதையிலும், கம்பராமாயணத்திலும் அழகுபெற வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற தெள்ளிய உண்மைகளை மனத்தினெண்ணி மாசறத்தெரிந்து கொண்டு அவற்றின் வழிநின்று வாழ்க்கையை நடத்துபவன் உயர்நிலை அடைவான் என்பதற்கு ஐயப்பாடில்லை. கலைமகளுடைய அருளினைப்பெற்ற கவிவாணர் நான்முகத் தேவனைப் போலப் புத்துருவங்களையாக்க வல்லவர்கள். கலைநூல் களையோதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கணதை அமைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அவற்றுக்கு நேராகச் சீர்படுத்துகின்றான். நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும், செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்.

1. இப் பகுதி மூலம் வெளிப்படும் தமிழின் பெருமைகள் எவை?
2. உத்தம கவிகள் பற்றிய கட்டுரை ஆசிரியரின் கருத்துக்கள் எவை?
3. ‘‘தமிழ்மாது விழித்தெழுந்த சிறப்பினைக் கண்ட பாவலரும், நாவலரும் இவளுக்குத் திருப்பள்ளியெழுச்சி கூறுகின்றனர். காரிருட் காலங் கழிந்துவிட்டது’’ இக்கூற்று மூலம் வெளிப்படும் செய்தியினை விளக்குக?
4. ‘கவிவாணர் நான்முகத் தேவனைப் போலப் புத்துருவங்களையாக்க வல்லவர்கள்’ ஆசிரியர் கையாண்டுள்ள இவ்வுவமையின் பொருட் சிறப்பினை விளக்குக? (16 புள்ளிகள்)

**பகுதி-II**

(03) இ. இடனறிதல் என்ற அதிகாரத்தில்,

அ. பகைவரின் அரணின் புறத்தே அடையக்கருதிய அரசர், அதற்கேற்ற இடத்தை அறிந்து கொள்ளல்

ஆ. வினை (போர்) செய்வதற்கான இடத்தை அறிதல்

இ. பகைவர்களைச் சென்றடையக் கூடாத இடமும், அவ்விடத்தில் சென்று போரிடின் உறும் இழுக்கும் என்பவற்றை எடுத்துக்காட்டுக

ஈ. இந்த அதிகாரத்தில் பிறிது மொழிதல் அணி கையாளப்பட்டுள்ளவாறு என்பவற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

(04) குகப்படலத்தில், குகன் கட்டளையாற் பல நாவாய்கள் வருதல் தொடக்கம் துடுப்புக் கொண்டுள்ள நாவாய்கள் சென்ற வருணனை வரையுள்ள பகுதியில்,

அ. நாவாய்களின் தோற்றப்பொலிவு பற்றிய வருணனை

ஆ. நீந்திச் சென்ற யானைகள் பற்றிய வருணனை

இ. நாவாய்களிற் சென்ற தேர்கள், குதிரைகள் பற்றிய வருணனை

ஈ. கையாளப்பட்டுள்ள உவமை அணிகள் என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP - EXAM

(05) ''எனக்கு வயது பதின்மூன்று'' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

அ. பெண் பாத்திரப் படைப்புக்கள்

ஆ. ஆண் பாத்திரப் படைப்புக்கள்

இ. சிறுகதையில் காணப்படும் இஸ்லாமியப் பண்பாட்டு அம்சங்கள்

ஈ. தலைப்பின் பொறுத்தப்பாடு

என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

(06) தேம்பாவணி காட்சிப்படலத்தில்,

அ. இயேசுவைக் கண்ட இடையர்களின் மகிழ்ச்சி

ஆ. இடையர்களின் பெருமைகள்

இ. இடையர்கள் இயேசுமீது கொண்ட பக்தி

ஈ. பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகள்

என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

(07) ''ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது'' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு,

அ. இந்நாவல் மூலம் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள்

ஆ. பெண்கல்வியின் அவசியம்

இ. தாமோதரம், சௌந்தரம் ஆகிய பாத்திரப்படைப்புகள்

ஈ. மொழிநடை

என்பவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

(08) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ. ''தியாகம்'' என்ற சிறுகதையில் முகத்தார், குமாரசாமி மீது கொண்ட பாசம்

ஆ. ''மணிமேகலை'' காப்பியத்தில் அந்திமாலை வருணனை

இ. ''படுமழை பொழிந்த பயமிகு புறவின்'' என்ற அகநானூறு செய்யுளில் கார்காலத்தில் முல்லை நிலம் பற்றிய வருணனை

ஈ. பாரதிதாசனின் ''உதயசூரியன்'' என்ற கவிதையில் உதயசூரியனின் பணிகள்

உ. திருப்பாணாழ்வாரின் ''அமலனாதி பிரான்'' பதிகத்தில் இடம்பெற்றுள்ள புராணக்கதைகள்.

(20 புள்ளிகள்)

NWP - EXAM



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

72 T II

முதலாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
First Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : ........................

# தமிழ் II
# Tamil II

காலம் : 3 மணி

**அறிவுறுத்தல்கள்**

- **பகுதி 1 இல் உள்ள மூன்று வினாக்களையும் பகுதி 2இன் "அ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் "ஆ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
- **முதலாம் வினாவின் "ஆ" பகுதியிலுள்ள இருபது வினாக்களும் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.**

(01) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஓவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் வருடொலி.

1) க் 2) ப் 3) ந் 4) ர் 5) ய் ( )

1.2 முன் உயிர் இடம்பெற்றுள்ள சொல்.

1) உரல் 2) ஒன்று 3) இலை 4) ஆடு 5) ஆமை ( )

1.3 சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்.

1) குணத்தால் 2) படித்தால் 3) எழுதினால் 4) பற்றை 5) வளங்கள் ( )

1.4 'கள்' விகுதி இணையும் போது அவ்விகுதியின் முதல் எழுத்தை இரட்டிக்கச் செய்யும் சொல்.

1) மனம் 2) பலாக்காய் 3) தலைக்கவசம் 4) வடு 5) பாடல் ( )

1.5 ஒன்றுக்கு மேற்பட்ட விவகாரம் இடம்பெற்ற சொல்

1) பலாப்பழம் 2) வந்தான் 3) மனவேதனை 4) வாட்படை 5) மரஞ்செடி ( )

1.6 செயப்பாட்டு வினை வடிவத்திற்கு மாற்றக் கூடிய வாக்கியம்.

1) மாதவன் நடந்து சென்றான்
2) மாதவன் அழகாக சிரித்தான்
3) மாதவன் அழகாக ஓவியம் வரைந்தான்
4) மாதவன் தானாகவே எழுந்தான்
5) மாதவன் கொழும்புக்கு வந்தான் ( )

1.7 உடம்படுமெய் இடம்பெறாத சொல்.

1) பூனையை 2) பலாவை 3) உணவை 4) அரிசியை 5) பசுவை ( )

1.8 படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் இடம்பெற்றுள்ள வாக்கியம்.

1) நளன் தேரில் வேகமாகச் சென்றான்
2) நளன் தன் தேரில் வேகமாகச் சென்றான்
3) நளன் இருதுபர்ணனின் தேரில் வேகமாகச் சென்றான்
4) நளன் இருதுபர்ணனுடன் தேரில் வேகமாகச் சென்றான்
5) நளனும் இருதுபர்ணனும் தேரில் வேகமாகச் சென்றார்கள் ( )



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

1.9 ‘ஆவது’ என்ற இடைச்சொல் திடக்குறிப்பின்மையைப் பொருளில் வந்துள்ள வாக்கியம்.

1) நான் பாலாவது தேநீராவது குடிப்பேன்
2) நான் நாளைக்காவது வருவேன்
3) நானாவது சித்தியடைவதாவது
4) நான் அங்கு எப்போதாவது வருவேன்
5) நான் உனக்காவது தருவேன் ( )

1.10 அரை மாத்திரையைக் கொண்ட உகரம்.

1) உயிர் 2) பாக்கு 3) பள்ளு 4) முயல் 5) நினைவு ( )

1.11 நிலைமொழி ஈற்றுமெய் இரட்டித்துப் புணர்ந்த சொல்.

1) எண்ணெய் 2) தண்ணீர் 3) பெண்ணரசி 4) வெண்ணிலவு 5) வெண்டிக்காய் ( )

1.12 இயல்பாகவும் விகாரமாகவும் புணரக்கூடியது.

1) மண் + குடம் 2) மண் + வீடு 3) மணல் + மண்
4) வெண் + மேகம் 5) வெண் + நிலவு ( )

1.13 ‘ந’ கரம் ‘ன’ கரம் ஆகிய எழுத்துக்கள் ஒரே விதமாக உச்சரிக்கப்படுவதற்கு உதாரணம்.

1) தந்தை, அன்பு 2) பந்து, கன்று 3) நாள், பாடினாள்
4) ஆந்தை, சென்றான் 5) காந்தம், கானகம் ( )

1.14 பகுதி இரட்டித்துக் காலங்காட்டும் சொல்.

1) வந்தாள் 2) கட்டினாள் 3) அழைத்தாள் 4) கூப்பிட்டாள் 5) சொன்னாள் ( )

1.15 கூட்டுப்பகுதி இடம்பெறாத சொல்.

1) நடந்தார்கள் 2) எழுதிமுடித்தார்கள் 3) கண்டுபிடித்தார்கள்
4) குருவிக்கூடுகள் 5) நீரேரிகள் ( )

1.16 மகாகவி உருத்திர மூர்த்தி அவர்கள் ‘கோடை’ என்ற நாடகத்தை எழுதியுள்ளார். இவ்வாக்கியத்தில் ‘அவர்கள்’ என்பது.

1) பலர்பால் 2) படர்க்கைப் பெயர் 3) ஒருமைப் பெயர்
4) மரியாதை பன்மைப் பெயர் 5) மரியாதை ஒருமைப் பெயர் ( )

1.17 செய்வித்தல் என்ற தொழிற்பெயரின் சரியான பகுப்பு

1) செய்வி + த் + தல் 2) செய் + வி + த் + த் + தல் 3) செய் + வி + த்தல்
4) செய் + த் + த் + அல் 5) செய்வி + த் + த + அல் ( )

1.18 மரத்திலிருந்து ஐந்து ரோஜாப் பூக்களைப் பறித்தேன். அவற்றில் இரண்டு வாடின. இவ்வாக்கியத்தில் இரண்டு என்பது.

1) எண்ணுப்பெயர் 2) மாற்றுப்பெயர் 3) எண்அடை
4) அளவுப்பெயர் 5) பெயரடை ( )

1.19 தொழிலாளிகளால் வேலைகள் முடிக்கப்பட்டன. இங்கு “முடிக்கப்பட்டன” என்பதன் பகுதி.

1) முடி 2) முடிக்க 3) முடித்து 4) முடிக்கப்படு 5) முடிக்கப்பட்டு ( )

1.20 ஏழாம் வேற்றுமை பருப்பொருள் சாராத இடப்பொருளை உணர்த்தும் வாக்கியம்

1) மேசையில் பாரதியின் புத்தகங்கள் உள்ளன
2) மேசையிலிருந்து புத்தகங்கள் விழுந்தன
3) வானில் வெண்ணிற மேகங்கள் அழைந்துத் திரிகின்றன
3) பாரதியின் சிந்தனையில் தோன்றிய நவீன எண்ணங்கள் மக்களால் போற்றப்படுகின்றன
5) சோமாலியாவில் வாழும் மக்கள் பலர் பட்டினியினால் வாடுகின்றனர் ( )

(20 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

NWP - EXAM

## பகுதி I

(02) அ. பின்வரும் உரைபகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

தமிழ் வசனநடை பிறந்து பல வருஷங்கள் ஆகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும். ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்தப் பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமென்பது என்னுடைய கருத்து. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது.

பழக்கமில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்கமில்லாமல் தனக்கும் அதிக பழக்கமில்லாத ஒரு விஷயத்தை குறித்து, எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும் என்பது சந்தேகமில்லை. ஆனாலும், ஒரு வழியாக முடிக்கும் போது, வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப்பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அல்லது, ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டிவைத்துக்கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல், ஒன்றுமில்லாமல் நடை நேராகச் செல்ல வேண்டும். முன்யோசனை இல்லாமல் நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்துவிட்டால் பின்பு சங்கடமில்லை. ஆரம்பத்திலே, மனதிலே கட்டி முடித்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைரியமுமிருந்தால் கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியமில்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும், வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை, நமது தற்கால வசனநடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால் கை நேரான தமிழ் நடையெழுதும். (13 புள்ளிகள்)

ஆ. பின்வரும் உரைபகுதியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் எனும் விடயம் படித்தவர் தொடங்கி பாமரர் வரை எல்லோருக்கும் தெரிந்திருந்தும் தமது சூழலினைப் பாதுகாக்க மனிதர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் பாதுகாக்கும் வீதத்தினை விட மாசடையும் வீதமே அதிகமாகக் காணப்படுகின்றது. சூழல் மாசடைதல் பற்றி அக்கறையின்றி இருப்பதற்குக் காரணம் யாதெனில் அதனால் வரும் விளைவுகள் சில வருடங்களுக்கு அப்பால் நிகழப் போகின்றவை என்பதும் அவை மிக மெதுவாக படிப்படியாகவே நிகழ்பவையாக இருப்பதுமாகும். பல வருடங்களுக்கு பின் நிகழப் போகின்ற எந்தப் பிரச்சினையையும் விட மனிதர்களுக்கு அவர்களின் அன்றாடப் பிரச்சினைகள் மிக முக்கியமாகத் தென்பட்டன. தவிரவும் வெவ்வேறு சமூகங்களுக்கு வெவ்வேறு நலன்கள் சார்ந்த பிரச்சினைகள் காணப்பட்டன. வறியோர்களுக்கு அவர்கள் அன்றாடம் உயிர் வாழ்வதே பிரச்சினையாகும். அதில் சூழலைப் பற்றிக் கவலைப்படுவது எங்கே? வசதி படைத்தவர்களுக்கோ அவர்கள் நாளுக்கு நாள் தமது வசதிகளையும் அந்தஸ்தினையும் இன்னுமின்னும் உயர்த்துவது பிரச்சினையாகும். அதைவிட்டு சூழலைப்பற்றிக் கவனித்துக் கொண்டிருந்தால் தாம் விரும்பியது போல கோடீஸ்வரராக மாறுவதற்கு ஒரு வாழ்நாள் போதாமலிருந்தது. கொள்கை வகுப்போர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இவ்விரண்டு வர்க்கத்தினரையும் ஓரளவு திருப்திப்படுத்துவதும் அதே நேரம் தமது சட்டைப் பைகளை ஊழல் வழிகளினால் வரும் வருமானத்தினால் நிரப்பிக் கொள்வதும் பிரச்சினையாகும். இந்த பிரச்சினைகள் தாம் முக்கியம் பெற்றது என்று சொல்வதிற்கில்லை. அவரவர்க்கு அவரவர் பிரச்சினைகள்தாம் பூதாகரமாகத் தெரியும் என்பது நடைமுறை யதார்த்தமாகும்.

வெவ்வேறு மக்கள் குழுக்களின் தேவைகளும் பிரச்சினைகளும் அரச கொள்கைகளிலே பிரசன்னமாகின்றன. அரசியல்வாதிகள் சகல மக்களின் வாக்குகளையும் பெறவேண்டியவர்களாகையினால் எல்லோரையும் திருப்திப்படுத்தும் கழைக்கூத்தாடி வேலையைச் செய்வர். அதன் விளைவே அரச கொள்கை திட்டங்களாகும். பொதுவாக என்ன நடந்தாலும் தாம் அனுபவிக்கும் வசதிகளை ஓரளவேனும் குறைப்பதற்கு மக்கள் விரும்புவதில்லை. இதனால் அரசியல்வாதிகளும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை குறைய வைக்கும் திட்டங்களை அமுலாக்குவதனைக் கூடியளவு தவிர்த்துக் கொள்வர்.

1. ''சூழலைப் பாதுகாக்கும் வீதத்தினைவிட மாசடையும் வீதமே அதிகம்'' என்பதால் கருதப்படுவது யாது ?
2. வெவ்வேறு சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை ?
3. வெவ்வேறு சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார் ?
4. சூழல் மாசடைதல் பற்றி அக்கறையின்மைக்கு ஆசிரியர் கூறும் காரணங்கள் எவை ?

(12 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(03) பின்வருவனவற்றள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ. தொற்று நோய்களும் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்.

ஆ. தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களின் விளைவுகள்.

இ. மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் பாடசாலையின் பங்கு.

ஈ. இலக்கியக் கல்வியும் மனித மேம்பாடும்.

உ. ''ஒழுக்கம் விழுப்பம் தரலால்''. (25 புள்ளிகள்)

(04) அ. பதினெண் மேற்கணக்கு நூல்களில் பத்துப்பாட்டு நூல்களை தருக ?

ஆ. சங்க இலக்கியங்களின் செய்யுள் மரபினை விளக்குக?

இ. பட்டினப்பாலை, அகத்திணை இலக்கியமா, புறத்திணை இலக்கியமா எனக் கருத்துரைக்குக?(15 புள்ளிகள்)

(05) அ. சங்கமருவிய கால பக்தி இலக்கியங்களை தருக.

ஆ. அவற்றின் பண்புகளை விளக்குக.

இ. பக்தி இலக்கிய வளர்ச்சியில் காரைக்கால் அம்மையாரின் பங்கினை விளக்குக. (15 புள்ளிகள்)

(06) ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர்கால பின்வரும் இலக்கியங்களை விளக்குக.

அ. பள்ளு இலக்கியங்கள். ஆ. புராண இலக்கியங்கள். இ. நாடக இலக்கியங்கள்.

(15 புள்ளிகள்)

(07) ஐரோப்பியர் வருகையால் ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட புதிய மாற்றங்களை விளக்குக.

(15 புள்ளிகள்)

(08) அ. 1. பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.

- வெட்டித் துண்டாக்கப்பட்ட மாணவர்களின் துணிகளை பொதி செய்தனர்

2. பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக் காட்டி, வழுவற்ற வகையில் திருத்தி எழுதுக,

- எமது ஊரில் 2003 களில் ஒரு கலவரம் இடம்பெற்றது.

3. பின்வரும் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பிரித்தக் காட்டுக.

- குமாரசாமி நாணயக் கயிற்றை இளக்கி விட்டு, மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான்.

4. பின்வரும் வாக்கியத்தை செயப்பாட்டு வாக்கியமாக மாற்றி எழுதுக.

- '' பாட்டுக்கு ஒரு புலவன்'' என்று போற்றப்படும் பாரதி பாமர மக்களும் நயந்து இரசிக்கும் பல இனிய பாடல்களை பாடியுள்ளார்.

5. பின்வரும் சொற்களில் காணப்படும் எழுத்துப் பிழைகளை திருத்தி எழுதுக.

- அத்திவாரம்
- சித்தரித்தல் (10 புள்ளிகள்)

ஆ. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

1. உயிரீற்றுப் புணர்ச்சி
2. பல பொருள் தரும் உரிச் சொல்
3. தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் (5 புள்ளிகள்)



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

**முதலாம் தவணை பரீட்சை- 2020**

**க. பொ. த. உயர்தரம் - தரம் 13 - Grade 13**

# தமிழ் - Tamil I

**விடைக்குறிப்புகள்**

விடைக்குறிப்புகள்

பகுதி - I

1\. அ (i) திணை – பாடாண், துறை – பரிசில் கடாநிலை

(ii) – எந்தனை தடவையாயினும், ஒருவராக மட்டுமின்றி பலராகச் சென்றாலும் முதல்நாள் போல் விருப்புடன் வழங்குபவன். – அவனது கொடை நிச்சயமானது. இதனை உவமை மூலம் கூறுகிறார்.

(iii) * பெயர்ச்சுட்டு பாடப்பட்டுள்ளது.

* கொடை, வீரம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

* புலவர் கூற்றாக அமைந்துள்ளது

ஆ. * குகன் தன் சேனைகளுக்குக் கூறிய வீர வார்த்தை.

ஆ * இராமன் சொல்லிய நட்பு என்ற வார்த்தையை வியந்து மகிழ்தல்

* இராமனுக்காக பரதனின் படையை எதிர்க்க முனைதல்

இ. * எதுகை, மோனை பயன்படுத்தப்பட்டுள்ளன.

* போவாரோ, ஏகாரோ போன்ற வினாக்கள் மூலம் சந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

2\. (i) * மானிடத் தன்மையினால் பலர்

* மானிட வல்லமையினால் பலர் இந்த உலகத்தை ஆட்சி செய்வதைக் கண்டுள்ளோம்.

* இந்த உலகத்தில் மனிதன் வாழ்ந்த அளவுக்கு, அவன் ஆற்றிய செயல்களுக்கு, மானிட ஆற்றலுக்கு அப்பால் வேறு எந்த ஆற்றலும் இருந்ததில்லை.

* மானிடம் என்பது இழிவான – ஆற்றலற்ற



இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

ஒன்று அல்ல. உணர்ச்சியற்ற ஒன்றைக்
குறிப்பதும் அல்ல.

* தொடக்க காலத்தில் மனிதன் தன் ஆற்றலை உணராதவனாய் காட்டுமிராண்டியாய் இயற்கைக்கு அடங்கி வாழ்ந்தது உண்மைதா. ஆனால் கூடிய விரைவில் தன் ஆற்றலை உணர்ந்து வளர்த்து இயற்கையையும் அடக்கியாண்டு பல சாதனைகளைப் புரிந்து விட்டான்.

(II) - மானிடத் தன்மையை அதன் ஆற்றலை நம்பி அதனாலே பூமியில் உயர்ந்த வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்

- "மானிடம் என்றொரு வாளுறும் ----- பெருக்கும்"

(III) * ~~மானிடத்தை போ~~

- "மானிடம் போற்ற மறுக்கும் .. வெறுக்கும்"

(IV) - மானிடம் என்றொரு வாள்

- மானிடம் என்ற ஒன்று
- சமத்வ உச்சி
- பகுத்தறிவாம் விழி

அல்லது.

(I) ~~* வேந்தரால் போற்றப்பட்டமை~~

* ~~அகத்தியர் தொடக்கம் பல புலவர்களா~~ல் ~~ஆதரிக்கப்பட்டமை.~~
* முன் தோன்றிய மொழியாக விளங்குகின்றமை, நிலைபெற்று விளங்கி
* இரண்டு கோடி மக்களுடைய மொழியாக விளங்குகின்றமை.
* உலகின் பல நாடுகளில் வழங்கி வருகின்றமை.

(II) * வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்கும் ஆற்றல் உத்தம கவிகளுக்கு உண்டு.

* உத்தம கவிகள் கூறியுள்ள கருத்துண்மைகளை மனதில் எண்ணி, அவற்றைக் குற்றமில்லாத முறையில் உணர்ந்து, வாழ்க்கை நடத்துபவன் உயர்ந்த நிலையடைவான்.


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

* புறநானூறு, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்கள் உத்தம கவிகளைப் படைக்கப்பட்டவை.
* உத்தம கவிகள் பிரம்மாவைப் போல புதியவற்றையும் படைக்கக் கூடியவர்கள்.
* நோக்கத்தான் செய்கையும், செய்கையான் நோக்கமும் உயர்வுடைய உத்தம கவிகள் வழிகாட்டியுள்ளனர்.

(iii) * தமிழ் மொழியின் வளர்ச்சியை தடுக்கும் அம்சங்கள், அச்சு தடைகள் நீங்கிவிட்டன.
* தமிழ்மொழி எழுச்சியடையத் தொடங்கிவிட்டது.

(iv) * பிரம்மா (நான்முகன்) படைக்கு ஆற்றல் கொண்டு விளங்குவது போல கவிஞர்கள் கவிதைகள் மூலம் படைக்கும் ஆற்றல் மிகுந்தவர்கள். சமூக மாற்றத்தை உருவாக்கக் கூடியவர்கள்.

3. அ. 1 – 4 வரையான குறள்கள்
ஆ. 5 – 7 வரையான ,,
இ. 8 – 10 வரையான ,,
ஈ. 5 ஆம் 6 ஆம் குறள்கள்.

4. அ. 45, 46. 45 ஆம் 46 ஆம் பாடல்கள்
ஆ. 49 ஆம் 50 ஆம் பாடல்கள்
இ. 52 ஆம் 53 ஆம் பாடல்கள்
ஈ. 45, 46, 49, 51, 52, 53, 54, 55,

5. அ. லைலா, போழியாரின் மனைவி, லைலாவின் தாயார் ஆசியா, ஸரீனா ஆகிய பாத்திரப்படைப்புகளை விளக்க வேண்டும்
ஆ. சிக்கந்தர் போழியார், தாஹிரா ஆகிய பாத்திரப் படைப்புகளை விளக்க வேண்டும்


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

6. அபுகா

இ) * தேவதூதர் இயேசுவை வணங்க அழைத்த போது உடனே சென்று குழந்தையைக் கண்டு மகிழ்தல்

* குழந்தையின் பாதத்தை வணங்குதல்
* மாலைகளைத் குழந்தையின் பாதத்தில் சூடுதல்
* பக்தியின் காரணமாக பேரின்பம் நெஞ்சுக்குள் அடங்காமல் உயிர் உளங்கசால், பேரின்பம் வெளிப்பட இறைவனை பலவாறு போற்றுதல்.
* பாலை காணிக்கையாக வைத்தல்
* மரியாளும் சூசையும் கூறிய அன்பு கனிந்த வார்த்தைக் கேட்டு அவர்களின் அன்பை எண்ணி ஆனந்த கண்ணீர் விட்டனர்.
* பிரிந்து செல்லுமாறு கட்டளை பிறக்கும் பிரிய மனமில்லாமல் தங்கள் உயிர்களை அங்குவிட்டு திரும்பினர்.
* சேவரிடத்தில் வைத்த பேரன்பு இடையர்களுக்கு உயிராக விளங்குதல்.
* தினமும் வருதல்.
* மனத்தை மகிழ்ச்சி மழை பொழிந்து அழிய வெள்ளம் காட்டாற் ஓடிக் கரையில் ஒதுங்கிய முத்து போல இடைச்சியர் இயேசு பாலன் மீது கொண்ட அன்பினால் நல்ல புகழுரைகளை பொழிந்து நிற்பர்
* குழந்தை குகையில் பிறந்ததை எண்ணி வருந்துதல்
* மரியாளிடம் ஐயங்களை வினவி, தெளிவுபெறுதல்.

பெண்களுக்கு எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்க விருப்பமில்லை" என்று கூறுவதில் பெண் கல்வியின் அவசியம் கூறப்படுகிறது.


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

பகுதி – II
(விடைக் குறிப்புகள்)

| | |
|---|---|
| 1. 1.1. 4 | 1.11. 3. |
| 1.2. 3 | 1.12 – 1. |
| 1.3. 1 | 1.13 – 3 |
| 1.4. 4 | 1.14 – 4 |
| 1.5. 2 | 1.15 – 1. |
| 1.6. 3. | 1.16 – 5 |
| 1.7. 3. | 1.17 – 3 |
| 1.8. 2. | 1.18 2 |
| 1.9. 4. | 1.19. 4 |
| 1.10. 2 | 1.20. 4. |

2. அ – * தமிழுக்கு வசன நடை புதிது.
* வசன நடை தெளிவாக இருத்தல் அவசியம்
* இயன்ற அளவு, பேசுவது போல் எழுத வேண்டும்
* புதிய விடயங்களை எழுதும் போதும் வசனம் தெளிவாக உள்ளதா என்று கவனித்துக்கொள்ள வேண்டும்.
* எதை எழுதினாலும் எண்ணித் தெளிந்து இயல்பாக எழுத வேண்டும்.
* தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் என்பன உரைநடையில் இருத்தல் வேண்டும்,
* தற்கால வசனத்தில் சரியான ஓட்டம் இல்லை,
* தமிழ் மொழியில் ஆட்சி பெற்றால் நேரான நடையில் எழுதலாம்.

— புள்ளித் திட்டம் —
- உள்ளடக்கம் – 8 புள்ளிகள்
- வெளிப்பாட்டுத் திறன், அமைப்பு – 5 புள்ளிகள்,

ஆ (i) சூழலைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளின் வீதத்தைவிட சூழலை மாசுபடுத்தும் செயற்பாடுகளின் வீதம் அதிகமாக உள்ளது.

(ii) – வறியோர்களுக்கு அவர்கள் அன்றாடம் உயிர் வாழ்வதே பிரச்சினை.
– வசதி படைத்தவர்களுக்கு தமது வசதிகளையும் அந்தஸ்தினையும் இன்னுமின்னும் உயர்த்துவதே பிரச்சினை.
– கொள்கை வகுப்போர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இவ்விரண்டு வகுப்பினரையும் ஓரளவு திருப்திபடுத்துவதும் அதே நேரம் தமது சட்டைப்பைகளை ஊழல் வழிகளினால் வரும் வருமானத்தினால் நிரப்பிக்கொள்வதும் பிரச்சினைகள்.


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

(iii) வெவ்வேறு சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவரவர் நலன்கள் சார்ந்ததவை யாக இருக்கும். அவைதான் அவர்களுக்குப் பெரிதாக தெரியும்

(iv) – சூழல் மாசடைவதன் விளைவுகள் சில வருடங்களின் பின்னரே ஏற்படும் என்பதனால்.
– சூழல் மாசடைதல் மெதுவாக நிகழ்வதனால்
– மனிதனின் அக்கறை அவரவர் உடனடிப் பிரச்சினைகள் பற்றியதாக இருப்பதனால்

(v) (2)

3. புள்ளித்திட்டம்
– பொருள் – 12 புள்ளிகள்
– மொழிநடை – 08 "
– அமைப்பு – 05 "

4. அ. குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை

ஆ. * கலித்தொகை கலிப்பாவால் பாடப்பட்டது.
* பரிபாடல் பரிபாட்டில் பாடப்பட்டது.
* மதுரைக்காஞ்சி வஞ்சிப்பாவில் பாடப்பட்டது.
* ஏனைய இலக்கியங்கள் அகவல் பாவில் பாடப்பட்டன.
* அகத்திணை, புறத்திணைப் பாடல்கள் தனிநிலை செய்யுட்களாக காணப்படுகின்றன.
* அந்தாதி வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது உ+ம். பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து.
* சிறிய சொற்கள், அடைமொழிகள், தொகைகள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.
* பிறமொழி கலப்பின்றி பாடப்பட்டிருத்தல்.

இ. பத்துப்பாட்டில் அடங்கும் இந்நூல் திணைப் பாகுபாட்டில் அகமா, புறமா என்னும் கருத்து முரண்பாடு காணப்படுகிறது. அதாவது, இப்பாடலின் முதற்பகுதி காதல் துறை சார்ந்ததாக அமைந்துள்ளது. அதாவது, பாலைநில அக ஒழுக்கமாகிய பிரிதல் கூறப்படுகின்றது. அதனால் இது அகத்திணை இலக்கியமென பலரால் கூறப்படுகிறது.


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

5. அ * காரைக்கால் அம்மையாரின்
— அற்புதத் திருவந்தாதி,
— திருவிரட்டை மணிமாலை
— திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
— திருவாலங்காட்டுத் திருப்பதிகம்

* முதலாழ்வாரின்
— 1ஆம், 2ஆம், 3ஆம் திருவந்தாதிகள்.

ஆ * சிவன், திருமால் ஆகிய கடவுள்களை போற்றுகின்றன.
* புராண, இதிகாச கதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
* இறைவனுக்கு தோற்றம் கொடுத்து பாடியமை.
* விருத்தம் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
* இறைவன் மீது கொண்ட அன்பை, ஈடுபாட்டினை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.
* பதிகம், அந்தாதி, இரட்டை மணிமாலை ஆகிய வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இ. * பக்தி இலக்கியங்கள் படைத்து வழிகாட்டியமை.
* இறைவனுக்கு வடிவம் கொடுத்து பாடியமை
* விருத்தம் பயன்படுத்தியமை.
* பதிகம், ~~அந்~~ அந்தாதி, திருவிரட்டை மணிமாலை ஆகிய வடிவங்களை பயன்படுத்தியமை.
* இறைவனின் பெருமையை புராண, இதிகாசக் கதைகளை பயன்படுத்தி வெளிப்படுத்தியமை.

(iv) பாமர மக்களும் நயந்து இரசிக்கும் பல இனிய பாடல்கள் 'பாட்டுக்கு ஒரு புலவன்' என்று போற்றப்படும் பாரதியால் பாடப்பட்டுள்ளன.
அல்லது.
'பாட்டுக்கு ஒரு புலவன்' என்று போற்றப்படும் பாரதியால், பாமர மக்களும் நயந்து இரசிக்கும் பல இனிய பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

(v) — ~~அத்திய~~ அத்திபாரம்
— சித்திரித்தல்.


இவ்வினாப்பத்திரங்கள் சுகாதார அமைச்சின் சிபாரிசுகளுக்கேற்ப, சகல சுகாதார விதிகளுக்கமைய பாதுகாப்புடன் கூடிய முறையில் அச்சிட்டு, மற்றும் பொதியிட்டு, வினியோகிக்கப்பட்டுள்ளது.

WWW.LOL.LK

# BUY

## PAST PAPERS

071 777 4440

Buy Online - www.LOL.lk

- GCE O/L
- GCE A/L
- PAST PAPERS
- SHORT NOTES



Protect Yourself From Coronavirus

# YOU STAY AT HOME




# WE DELIVER!

**ORDER NOW**

## 075 699 9990

**WWW.LOL.LK**

LOL.lk
Learn Ordinary Level

**TOP CATEGORIES**

- GCE O/L Exam NEW
- Grade 09, 10 & 11
- Grade 06, 07 & 08
- Grade 04 & 05
- Grade 01, 02 & 03
- About Us
- Shop HOT
- Cart

HUGE SALE – SHOP NOW




**ISLANDWIDE DELIVERY**
Free delivery on all orders over Rs. 3500

**More than 1000+ Papers**
For all major Subjects and mediums

**ONLINE SUPPORT 24/7**
Shopping Hotline 071 777 4440

## FEATURED PRODUCTS

**SORT BY**

GCE O/L Exam




GCE O/L EXAM, SCIENCE
O/L Science Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, MUSIC
O/L Music Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, MATHEMATICS
O/L Mathematics Past Paper Book
රු 350.00
– 1 + ADD TO CART




GCE O/L EXAM, INFORMATION & COMMUNICATION TECHNOL...
O/L Information & Communication Tec...
රු 350.00




GCE O/L EXAM, HISTORY
O/L History Past Paper Book
රු 350.00




GCE O/L EXAM, HEALTH & PHYSICAL EDUCATION
O/L Health & Physical Education Past P...
රු 350.00